அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை - 600 006

மத்திய அரசால் வழங்கப்படும் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான படிப்புதவித் திட்டம்.

**(Central Sector Scheme of Scholarship for College and University Students)**

## செய்திக்குறிப்பு

மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள " கல்லூரி மற்றும் பல்கலைக் கழக மாணவர்களுக்கான படிப்புதவித் திட்டத்தின்கீழ் (**Central Sector Scheme of Scholarship for College and University Students**) 2010 - 2011 கல்வி ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் முதலாமாண்டு சேர்ந்து பட்டப்படிப்பு / தொழிற்கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்கவிருக்கும் கல்வி உதவித் தொகையினை பெற்றிட தகுதியுள்ள மாணவ/மாணவியரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பிப்பதற்கான தகுதிகள் குறித்து **htttp://www.tn.gov.in/dge** என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் 2010 - 2011 கல்வியாண்டில் முதலாமாண்டு சேர்ந்து இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு மாதம் ரூ.1000/- வீதமும், அவர்கள் தொடர்ந்து முதுகலைப் பட்டப்படிப்பு படிக்கும்போது மாதம் ரூ.2000/- வீதமும் அளிக்கப்படும். மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற்கல்வியில் முதலாமாண்டு சேர்ந்து பயிலும் மாணவர்களுக்கு முதல் மூன்று ஆண்டுகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதமும், நான்காவது மற்றும் ஐந்தாவது வருடங்களில் மாதம் ரூ.2000/- வீதமும் அளிக்கப்படும். ஒரு கல்வியாண்டில் பத்து மாதங்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும்.

தமிழ்நாடு, மாநிலப் பள்ளித் தேர்வு வாரியத்திற்கு மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள படிப்புதவித் தொகைக்கான பயனாளிகளின் எண்ணிக்கை 4883 ஆகும். ஒதுக்கப்பட்டுள்ள எண்ணிக்கையில் 50% மாணவர்களுக்கும், 50% மாணவியருக்கும் இக்கல்வி உதவித்தொகை வழங்கப்படும். பயனாளிகள் பாடத் தொகுதிகளின் படிநிலை பட்டியலின்படியும், மத்திய அரசின் இனவாரியான ஒதுக்கீடு விதிகளின்படியும் தெரிவு செய்யப்படுவார்கள்.

அரசுத் தேர்வுத் துறையால் நடத்தப்பட்ட மார்ச் 2010, மேல்நிலைப் பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்று கீழ்க்குறிப்பிட்டுள்ள 80 விழுக்காடு மற்றும் அதற்குமேல் மதிப்பெண்கள் பெற்று, விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கும் மாணவர்கள் இந்திய தேசத்தினராகவும், பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.4,50,000/-க்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

முக்கியக் குறிப்பு : மார்ச் 2010 மேல்நிலைத் தேர்விற்கு, அரசுத் தேர்வுத் துறையால் வழங்கப்பட்ட பதிவெண்ணை (**Register number**) இணைய தளத்தில் பதிவுசெய்ய வேண்டும். தகுதி மதிப்பெண்கள் பெற்றவர்கள் மட்டுமே விண்ணப்பித்தினை படியிறக்கம் (**download**) செய்துகொள்ள இயலும்.

முழுமையான விபரங்களுக்கு **http://www.tn.gov.in/dge** என்ற இணையதளத்தினைப் பார்வையிட்டு, தகுதிகளை நிறைவு செய்யும் மாணவ/ மாணவியர், விண்ணப்பத்தினை படியிறக்கம் (download) செய்து, முழுமையாக பூர்த்தி செய்து, விண்ணப்பத்தில் கோரப்பட்ட அனைத்து இணைப்புகளுடன் கீழ்க்காணும் முகவரிக்கு 16.11.2010-ற்குள் கிடைக்கும்வகையில் பதிவஞ்சல் / துரித அஞ்சல்மூலம் மட்டுமே சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. அஞ்சலக கால தாமதம் (Postal Delay) ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. நேரடியாகவும் மற்றும் தனியார் கொரியர் மூலமும் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மற்றும் முக்கியக் குறிப்பு வ.எண். 1 முதல் 7 வரை குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

<u>விண்ணப்பம் அனுப்பப்படவேண்டிய முகவரி</u>

இணை இயக்குநர்(மேல்நிலை)
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
டி.பி.ஐ.வளாகம்,கல்லூரிச் சாலை,
சென்னை - 600 006

விண்ணப்ப உறையின்மீது (Central Sector Scheme of Scholarship for College and University Students-2010) என அவசியம் தலைப்பிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. 16.11.2010-ற்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்களும் மற்றும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் எவ்வித முன்னறிவிப்புமின்றி கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

<u>முக்கியக்குறிப்பு</u> :

1. பிற மாநிலக் கல்வி வாரியத்தில் பயின்றோர்.
2. 80% சதவிகிதத்திற்கும் குறைவான மதிப்பெண்கள் பெற்றோர்.
3. March 2010 -க்கு முன்னர் தேர்ச்சி பெற்றோர்.
4. காலதாமதமாக பெறப்பட்ட விண்ணப்பங்கள்.
5. இவ்வறிவிப்பிற்கு முன்னர் விண்ணப்பம் செய்தவர்கள்.
6. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள்.
7. இணையதளத்தில் இருந்து (08.11.2010 முதல் 12.11.2010 வரை) படியிறக்கம் செய்யப்படாத விண்ணப்பங்கள், ஒளிநகல் மற்றும் தட்டச்சு செய்யப்பட்ட விண்ணப்பங்கள்.

2/11/2010

இடம் : சென்னை - 600 006
நாள் : 02.11.2010

(தண்.வசுந்தராதேவி)
இயக்குநர்

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

இயக்குநருக்காக.

## DIRECTORATE OF GOVERNMENT EXAMINATIONS, CHENNAI – 600 006.

## "CENTRAL SECTOR SCHEME OF SCHOLARSHIP FOR COLLEGE AND UNIVERSITY STUDENTS"

Applications are invited from eligible students for the award of scholarship under the above scheme. The candidates who have passed and secured a minimum of 80% of marks and above in the Higher Secondary Examination held in **March 2010**, conducted by the State Board of School Examinations, Tamil Nadu and pursuing FIRST YEAR of higher studies in 2010-2011 (not correspondence or distance mode) are eligible to submit application for getting scholarship announced by the Ministry of Human Resource Development, Department of Higher Education, Government of India.

From the applications received, the required number of 4883 applications will be selected based on merit category wise.

The scholarship will be given @ Rs.1000/- per month at Graduation level for first three years of College and University courses and Rs.2000/- per month at Post graduation level. Students pursuing professional courses would get Rs.2000/- per month in the $4^{th}$ and $5^{th}$ year. The scholarship would be paid for 10 months in an academic year.

**The award of scholarship shall be subject to the following conditions:**

1. The scholarship shall be awarded to the Indian nationals only.
2. The Undergraduate/Post graduate/Professional courses are pursued in a recognized college/institution in India.
3. The students should belong to non-creamy layer (Parental income not exceeding Rs.4.5 lakhs per annum) as defined by the Department of Personnel and Training in their Notification No.36012/22/93-Estt. (SCT), dated 08.11.1993 and as modified vide their OM No.36033/3/2004-Estt. (Res) dated 09.03.2004 and as may be further modified from time to time and **not availing of any other scholarship scheme.**
4. The reservation would be applicable in terms of Central Reservation Policy and internal earmarking.
5. The scholarship will be distributed amongst Pass outs of the Science, Commerce Humanities and Vocational Streams in the ratio of 3: 2: 0.5: 0.5 with equal number among boys and girls.

   The Blank application forms can be downloaded by the eligible candidates through http://www.tn.gov.in/dge on or before 12.11.2010.

The filled-in applications (Annexure III to VI the formats of which are available in this website) should be submitted to the Joint Director (Hr.Sec.), Directorate of Government Examinations, DPI Campus, College Road, Chennai – 6 on or before **16.11.2010** either by Registered or Speed Post.

Needless to mention that this is a provisional offer only and final selection will depend upon the student satisfying the eligibility criteria and number of scholarships ear-marked for this Board.

**Director of Government Examinations, Chennai – 6.**